# நன்றியுரை

தே.ப. பெருமாள் படைப்புக்கள் - ஓர் ஆய்வு என்னும் பொருளில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்ய அனுமதியளித்து உதவிய கேரளப் பல்கலைக்கழகத்திற்கும் நூலக வாய்ப்பளித்து உதவிய திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு மேற்கொண்ட காலத்து எனக்கு வழிகாட்டியாக இருந்து என்னை நெறிப்படுத்தி ஆய்வுக்கட்டுரைகளைத் திருத்தித் தந்து உதவிய அ. ஈனோஸ் (ஓய்வு பெற்ற முதுநிலை விரிவுரையாளர்) அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வுக்காலத்தில் உதவிய முனைவர்கள் கே. குற்றாலம் பிள்ளை அவர்களுக்கும், ஜோசப் சொர்ணராஜ் அவர்களுக்கும் தமிழ்த்துறையின் மற்ற பேராசிரியர்களுக்கும், முன்னாள் இந்நாள் துறைத்தலைவர்களுக்கும் ஆய்வுக்காகப் பல தகவல்கள் சேகரித்துத் தந்த பேராசிரியர் இரா. தியாக சுவாமி (ஓய்வு) அவர்களுக்கும்,

ஆய்விற்குத் தேவையான பல நூற்களைத் தந்தும், பேட்டி அளித்தும் உதவிய கவிஞர் பி. குமரேசன் அவர்களுக்கும், கவிஞர் தே.ப. பெருமாள் அவர்களின் மகன் திரு. தேசிக விநாயகம் அவர்களுக்கும், வானதி பதிப்பகத்தார்க்கும்,

ஆய்வுக் காலத்தில் உதவிய உடன் ஆய்வு மாணவர்களுக்கும்,

இவ்வாய்வேட்டைச் சிறந்த முறையில் கணினி மூலம் தட்டச்சுச் செய்த 'அவினா கம்யூனிக்கேசன்' நிறுவனத்தார்க்கும் நன்றி உரியது.